# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.274/2021

சாட்சி : DW– 1
பெயர் : திரு. ராமன் தேதி : 31.08.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( வாதிகள் தரப்பில்)

இவ்வழக்கில் 2 அட்டவணை சொத்துகள் உள்ளது. 2வது அட்டவணை சொத்து இறந்துபோன எனது இளைய சகோதரர் சீனிவாசனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது இளைய சகோதரர் இறந்த பிறகு அந்த சொத்தை எனது தாயார் அவரது வாரிசு என்ற முறையில் அடைந்து அனுபவித்தார் என்றால் சரிதான். என் தாயார் இறக்கின்ற வரையிலும் மேற்படி சொத்து சம்மந்தமாக எந்தவொரு ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு நானும், வாதிகளும்தான் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்து கீரைப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து என் தகப்பனாருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்து சம்மந்தமாக என் தகப்பனாருக்கும், அவரது உடன்பிறந்தவர்களுக்கும் இடையே வழக்கு நடந்து அந்த வழக்கில் அந்த சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கீரைப்பட்டியிலுள்ள சொத்து சம்மந்தமாக எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த கீரைப்பட்டியிலுள்ள சொத்தின் ஒருபகுதியில்தான் உயர் மின்னழுத்த கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான நஷ்டஈடு பெறுவதில்தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.31 17:35:57 +0530

I Additional District Judge,
Salem

என்றால் சரிதான். மேற்படி நஷ்டஈட்டு தொகையில்தான் இவ்வழக்கு 3வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கீரைப்பட்டியிலுள்ள சொத்தில் வாதிகளுக்கும், எனக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். கீரைப்பட்டியிலுள்ள சொத்து வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்டுவிட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் அந்த சொத்தில் தனித்தனியாக சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்பதற்கு நான் வருவாய் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தில் என் மனைவி பெயரில் ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த வீடு அமைந்துள்ள அடிநிலம் என் மனைவிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான். பெண்கள் பெயரில் அரசால் வீடு வழங்கப்படுகிறது என்பதற்காக என் மனைவி பெயரில் அந்த வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு என்னையும், வாதிகளையும் தவிர வேறு வாரிசுகள் உள்ளார்கள் என்பதற்கு நான் ஆவணம்எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2005ம் ஆண்டிற்கு முன்பாகவே என் தகப்பனார் வழக்கு சொத்துகளை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொடுத்துவிட்டார் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் வாதிகள் ஒவ்வொருவருக்கும், எனக்கும் சமஉரிமை உள்ளதுஎ ன்றும், வாதிகளின் உரிமையை ஏமாற்றுவதற்காக நான் பொய்யான கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு 4/5 பாக உரிமை உள்ளது என்றும், எனவே வாதிகள் வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.31 17:36:02 +0530

I Additional District Judge,
Salem